# IAA யினால் நிராகரிக்ப்பட்ட பாதுகாப்பு விசா விண்ணப்பம்

## IAA யினால் நிராகரிக்கப்பட்டால் விருப்பத்தேர்வுகள்

குடிவரவு மதிப்பீட்டு அதிகாரத்தால் (IAA) உங்களுடைய பாதுகாப்பு விசா விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால், உங்களுக்கு மூன்று விருப்பத்தேர்வுகள் உள்ளன:

### 1. தானாக முன்வந்து ஆஸ்திரேலியாவை விட்டுச் செல்லுதல்

IOM ஐ (குடியேற்றத்திற்கான சர்வதேச அமைப்பு ) 3211 1396 அல்லது 1300 116 986 ஆகிய தொலைபேசி எண்களில் அழையுங்கள்

### 2. புதிய பாதுகாப்பு விசா விண்ணப்பத்தைத் தாக்கல் செய்யக் கோரிக்கை விடுக்க வேண்டும்

உங்களிடம் முன்பு முன்வைக்கமுடியாத குறிப்பிடத்தக்க **புதிய** பாதுகாப்புக் கோரிக்கைகள் இருந்தால், புதிய பாதுகாப்பு விசாவிற்கு விண்ணப்பிக்க உள்நாட்டலுவல்கள் அமைச்சர் உங்களை அனுமதிக்கலாம்.

### 3. நீதிமன்றத்திற்குச் செல்லுதல் (நீதித்துறை சார்ந்த மீள்பரிசீலனை)

IAA யின் செயல்முறை நியாயமற்றது, அல்லது உங்கள் உரிமைக் கோரிக்கை சரியாகக் கேட்கப்படவில்லை, அல்லது வேறு சட்டரீதியான பிழை உள்ளது, என நீங்கள் கருதினால் அதை மீளாய்வு செய்ய **பெடரல் சர்கியூட் நீதிமன்றத்தைக் (FCC)** கேட்கலாம்.

சரியான **சட்டம் சார்ந்த செயல்முறைகளை** IAA பின்பற்றியதா என்று நீதிமன்றம் கவனமாக ஆராயும். ஆஸ்திரேலியா உங்களுக்கு ஒரு பாதுகாப்பு விசா கொடுக்க வேண்டுமா என்பது பற்றி அது ஆராயாது.

நீங்கள் நீதிமன்றத்தில் வெற்றி பெற்றால், ஆஸ்திரேலியா உங்களுக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டிய கடப்பாடு கொண்டுள்ளதா என்பதைப் பற்றி புதிய முடிவை எடுக்க உங்கள் வழக்கு மீண்டும் IAA க்கு அனுப்பப்படும். நீதிமன்றத்தில் தோல்வியுற்றால், பெரிய சட்ட செலவினங்களை நீங்கள் செலுத்த வேண்டும்.

## நீதிமன்றத்திற்கு விண்ணப்பிப்பது எப்படி

IAA யின் முடிவின் திகதியிலிருந்து **35 நாட்களுக்குள் நீங்கள் FCC க்கு விண்ணப்பிக்க வேண்டும்** அல்லது நீங்கள் அந்தக் கால எல்லைக்கு வெளியே இருந்தால் கால நீட்டிப்புக்கு

விண்ணப்பிக்க வேண்டும். நீதித்துறை சார்ந்த மீள்பரிசீலனை விண்ணப்பம் ஒன்றை நீங்கள் தாக்கல் செய்தவுடன் நீங்கள் ஒரு புதிய இணைப்பு விசாவிற்கு தகுதியுடையவராவீர்கள், இருப்பினும், IAA முடிவைப் பற்றித் தெரிவித்து **28 நாட்களுக்குள் படிவம் 1008 இல் ஒரு புதிய இணைப்பு விசாவிற்கு நீங்கள் விண்ணப்பிக்க வேண்டும்**.

எனவே தடுத்து வைக்கப்படுவதைத் தவிர்க்க சிறந்த வாய்ப்பாக, IAA முடிவின் 28 நாட்களுக்கு முன்னதாக நீதிமன்றத்திற்கும் (நீதிமன்ற மீள்பரிசீலனைக்கு) உள்நாட்டலுவல்கள் திணைக்களத்திற்கும் (ஒரு இணைப்பு விசாவிற்கு) விண்ணப்பிக்க வேண்டும்.

## நீதிமன்றத்திற்குக் கொடுக்க வேண்டிய படிவங்கள்

நீங்கள் உங்கள் விண்ணப்பத்தை காகிதம் அல்லது இணையம் மூலமாகச் சமர்ப்பிக்கலாம். நீதிமன்றத்திற்கு கொடுக்க வேண்டிய படிவங்கள்:

> **பெடரல் சர்கியூட் நீதிமன்றத்திற்கு (FCC) 'புலப்பெயர்வுச் சட்ட விண்ணப்பம்'** - IAA யினால் மறுக்கப்பட்ட அனைத்து குடும்ப உறுப்பினர்களையும் பாதுகாப்பு விசா விண்ணப்பப் படிவத்தில் பட்டியலிடவும். ஒரு உரைபெயர்ப்பாளர் தேவைப்பட்டால் குறிப்பிடவும்
>
> **சத்தியக் கடுதாசி -** இது சமாதான நீதவான் **(JP)** அல்லது வழக்கறிஞருக்கு முன் கையொப்பமிடப்பட்ட உங்கள் நிலைமை பற்றிய ஒரு அறிக்கையாகும். இது நீதிமன்றத்தில் ஒரு சான்றாகப் பயன்படுத்தப்படுகிறது. ஐ.ஏ.ஏ முடிவின் நகல் ஒன்றை இதனுடன் இணைக்கவும்.

குறைந்தபட்சமாக படிவங்களின் இரண்டு பிரதிகளை உருவாக்கி, அவற்றை நீதிமன்றப் பதிவகத்துக்குக் கொடுக்கவும். அவர்கள் அவற்றில் முத்திரை குத்துவார்கள் அவற்றை நீங்கள் அரசாங்க வழக்கறிஞர்கள் மற்றும் IAA க்குக் கொடுக்கவும்

## நீதிமன்றக் கட்டணம்

உங்களிடம் கொஞ்சப் பணம் இருந்தால், கட்டணம் ஏதும் செலுத்தாமல் இருப்பதற்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பத்தில் உள்ள ஒவ்வொரு நபரும் **நிதிசார்ந்த துன்பத்திற்கு விதிவிலக்களித்தல் படிவத்தை** (பெரியவர்களுக்கு) அல்லது **பொது விதிவிலக்களித்தல் படிவத்தை** (குழந்தைகளுக்கு) நிரப்ப வேண்டும். ஒரு வழக்கறிஞர், சமாதான நீதவான் அல்லது நீதிமன்றத்தின் அலுவலரின் முன் இவை கையொப்பமிடப்பட வேண்டும்.

## DHA மற்றும் IAA இலிருந்து தகவல்களைக் கோருதல்

பாதுகாப்பிற்கான உங்கள் விண்ணப்பத்தைத் தீர்மானிக்கும் போது உள்நாட்டலுவல்கள் திணைக்களம் (DHA) மற்றும் IAA ஆகிய அமைப்புகள் ஆழ்ந்து ஆராய்ந்த அனைத்து தகவல்களின் பிரதிகளை நீங்கள் பெற்றுக் கொள்ள முடியுமானால் அது உங்கள் வழக்குக்கு உதவும். படிவம் **424A** (DHA ஆவணங்கள்) மற்றும் **படிவம் 6** (IAA ஆவணங்கள்) பயன்படுத்துங்கள்.

## நீங்கள் நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்த பிறகு

**நீதிமன்றம் உங்களுக்கு முதல் நீதிமன்றத் திகதியை வழங்கும்**. நீங்கள் சமூகமளிக்கவில்லை என்றால், உங்கள் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படலாம் அத்துடன் சட்ட செலவுத் தொகைகளை நீங்கள் செலுத்த வேண்டும்.

**நீங்கள் முதல் நீதிமன்ற திகதியில் ஒரு வழக்கறிஞரைக் கொண்டிராவிட்டால்,** புதுப்பிக்கப்பட்ட மேம்பட்ட விண்ணப்பத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு நீதிமன்ற புத்தகத்தைப் நீங்கள் பெற்ற திகதி முதல் எட்டு முதல் பன்னிரண்டு வாரங்களுக்கு நீங்கள் வேண்டுகோள் வைக்க வேண்டும். வெற்றிபெறுவது தொடர்பான வாய்ப்பைப் பற்றி ஆலோசனை செய்ய ஒரு இலவச (பொது நலத்துக்காக) வழக்கறிஞரைக் கண்டுபிடிக்க முயற்சி செய்வதற்கு இது நேரத்தைக் கொடுக்கும்.

**நீங்கள் நீதிமன்றத்தின் புத்தகத்தைப் பெறும் போது,** உங்களுக்கு ஒரு வழக்கறிஞர் இல்லாவிட்டால், Indooroopilly Uniting Church அல்லது RAILS (கீழே காண்க) ஐ தொடர்பு கொள்ளவும்.

**<u>உங்கள் தொடர்பு விபரங்கள் மாறினால்,</u>** நீதிமன்றம் மற்றும் அரசாங்க வக்கீல்கள் **'**சேவைக்கான முகவரி அறிவிப்பு**'** படிவத்தில் எழுத்துமூலமாக நீதிமன்றம் மற்றும் அரசாங்க வழக்கறிஞர்கள் ஆகியோருக்குத் தெரிவியுங்கள் படிவம் **929** இல் **DHA** க்கும் தெரிவியுங்கள் .

## சட்டம் சார்ந்த உதவி

உங்களுடைய பாதுகாப்பு விசா மறுக்கப்பட்டால், நீங்கள் உடனடியாகச் சட்டம் சார்ந்த ஆலோசனைகளை பெற வேண்டும். ஒரு வழக்கறிஞருக்குக் கொடுக்க உங்களிடம் பணம் இல்லை என்றால் நீங்கள் இலவச ஆலோசனை பெறலாம், அத்துடன் நீதிமன்றத்திற்கு ஒரு கட்டணமற்ற (இலவச) வழக்கறிஞரின் சேவையைப் பெறும் வாய்ப்பு இருக்கலாம். **உங்கள் வழக்கை நீதிமன்றத்தில் வெற்றிகரமாகச் சந்திக்கும் வாய்ப்பு இல்லையென்றால், நீங்கள் நீதிமன்றத்திற்கு ஒரு இலவச சார்பு வழக்கறிஞரைப் பெறமாட்டீர்கள்**. நீங்கள் பின்வருபவர்களிடமிருந்து உதவியைப் பெறலாம்:

அகதி மற்றும் குடிவரவு சட்டம் சார்ந்த சேவை (ரெயில்ஸ்) சட்டம் சார்ந்த ஆலோசனை வழங்குகின்றது. தொலைபேசி 07 3846 9300.

Indooroopilly Uniting Church (IUC). நீதிமன்றப் படிவங்கள், இணைப்பு விசா மற்றும் FOI படிவங்களைப் பூர்த்தி செய்ய உதவி செய்வார்கள், அத்துடன் , உங்களை சால்வோஸ் சட்டத்திற்கு பரிந்துரைத்து அனுப்புவார்கள். வியாழக்கிழமை அல்லது சனிக்கிழமைகளில் 74 ஸ்டேஷன் ரோட்டிலுள்ள, Indooroopilly க்கு மாலை 2 மணி முதல் -5 மணி வரை வருகை தரவும்

Salvos Legal Humanitarian உங்களுடைய நீதிமன்ற வழக்குக்கு ஒரு இலவச வழக்கறிஞரைப் பெற முயற்சி செய்வார்கள். முதலில் நீங்கள் ஐயுசி கிளினிக்குக்குச் சென்று, IUC ஆல் Salvos க்குப்ப பரிந்துரைத்து அனுப்பப் பட வேண்டும். தொலைபேசி 07 3280 8860.

**Federal Circuit Court Registry** Level 6, Harry Gibbs Commonwealth Law Courts Building, 119 North Quay, Brisbane இல் அமைந்துள்ளது Tank வீதியிலிருந்து கட்டிடத்திற்கு உட்செல்ல வேண்டும். நீதிமன்றப் படிவங்கள் - இணையத்தில் தேடுங்கள் 'பெடரல் சர்கியூட் நீதிமன்ற விண்ணப்பம் – புலப்பெயர்வுச் சட்டம்' மற்றும் பெடரல் சர்கியூட் நீதிமன்ற – சத்தியக்கடுதாசி ஒன்றைத் தயாரித்தல்.

www.fedcourt.gov.au/online-services/elodgment எனும் இணையத்தில் விண்ணப்பத்தைத் தாக்கல் செய்தல்

**www.rails.org.au/publications** எனும் இணையத்தில் விவரமான தகவல் தொகுதி கிடைக்கும்

இது சட்டம் சார்ந்த ஆலோசனை அல்ல. குறிப்பிட்ட அறிவுரைக்கு ஒரு புலப்பெயர்வு முகவரை / வழக்கறிஞரைப் பார்க்கவும்

INDRO.CHURCH UNITING INDOOROOPILLY — RAILS Refugee and Immigration Legal Service — Salvos Legal Justice, together